1973 ஏப்ரல் 3]

இம் மாநிலத்தில், கடந்த மூன்று ஆண்டுகளாகத் தங்கள் தணிக்கை அறிக்கைகளை ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் வைக்காத கூட்டுறவு மத்திய வங்கிகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தமிழகத்தில் உள்ள 16 மத்திய கூட்டுறவு வங்கிகளும் 1968-69, 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளை தங்கள் பொதுக் குழுக் கூட்டங்களில் வைத்துள்ளன.

அந்தப் பதினாறு வங்கிகளின் 1971-72-ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை கிடைத்த தகவல்களின்படி, 4 வங்கிகள் இதுவரை பொதுக் குழுக் கூட்டங்களைக் கூட்டி, அந்தக் கூட்டங்களில் 1971-72-க்கான தணிக்கை அறிக்கைகளையும் வைத்துள்ளன.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

Message from the Governor

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973.

(2) பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Assembly and signed by him, for the concurrence of the Council.

I have further received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Genral Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12

of 1973), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

3. கவன ஈர்ப்பு

(1) தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்பட்டும், இதுவரையில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படாத காரணத்தால், 28—3—73 நாளிலிருந்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உண்ணுவிரதம் மேற்கொள்வதாக அறிவித்திருந்தும், இப்போது அவர்கள் உண்ணுவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மதுரை மாவட்டம் தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முது நிலை ஆதாரப் பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், தேவாரப்பட்டியிலுள்ள ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளியில் நிர்வாகத்தில் பலவிதமான முறைகேடுகள் இருந்ததனால், அப்பள்ளியின் ஏற்பையும் மானியத்தையும் ரத்து செய்து திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் 25—6—70 அன்று ஆணையிட்டார். அவ்வாணையினை எதிர்த்து பள்ளி நிர்வாகி சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் வழக்குத் தொடுத்தார். சென்னை உயர்நீதி மன்றம் மேற்கூறிய ஆணைகளுக்கு இடைக்காலத் தடையுத்தரவு அளித்தது. நீதிமன்றத்தின் ஆணைக்கு இணங்க பள்ளியை ஏற்புடையதாகவே கருதி, 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. பின்னர், உயர்நீதி மன்றம், 29—10—71 அன்று பள்ளி நிர்வாகியின் ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தது. ஆகவே, பள்ளியின் ஏற்பும், மானியமும் அந்நாளிலிருந்தே ரத்து செய்யப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.